

# இடரை மதிப்பிடுதல் மற்றும் கட்டுப்படுத்துதல்: வணிக வழிகாட்டி

EPA VICTORIA
Environment Protection Authority Victoria

VICTORIA State Government

Translated publication: 1771

வெளியீடு 1695.1* ஆகஸ்ட் 2018

*இது மே 2018 இல் வெளியிடப்பட்ட 1695 க்குப் பதிலான மாற்றம்

EPA விக்டோரியாவால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது

நிலை 3, 200 விக்டோரியா தெரு, கார்ல்டன் VIC 3053

1300 372 842 (1300 EPA VIC)

இந்த வெளியீட்டை ஆன்லைனில் PDF வடிவத்தில் **epa.vic.gov.au** இல் காணலாம்

உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் உதவி தேவைப்பட்டால் அல்லது இந்த ஆவணத்தை மொழிபெயர்க்க விரும்பினால், தயவுசெய்து 131 450 ஐ அழைத்து உங்களுக்கு விருப்பமான மொழியை அறிவுறுத்துங்கள்.

# பொருளடக்கம்

**அறிமுகம் ........ 4**

*நோக்கம்........ 4*

*இந்த வழிகாட்டியைப் பற்றி........ 4*

*இடர்களையும் அபாயங்களையும் கட்டுப்படுத்தும் படிகள் ........ 6*

**படி ஒன்று: அபாயங்களை அடையாளம் காணுதல்........ 7**

*எதை எதிர் நோக்குவது ........ 7*

*அபாயங்களை அடையாளம் காணும் வழிகள் ........ 9*

வணிக *நடவடிக்கைகளை அடையாளம் காணுதல்........ 9*

*பணி செய்யும் இடத்தை ஆய்வு செய்தல் ........ 9*

கலந்தாய்வுகள் *மற்றும் கூட்டங்கள்........ 9*

*கிடைக்கும் தகவல்களைப் பயன்படுத்துதல் ........ 10*

**படி இரண்டு: இடர்களை மதிப்பிடுதல்........ 11**

*சாத்தியக்கூறுகளை மதிப்பிடுதல் ........ 11*

*விளைவுகளை மதிப்பிடுதல்........ 13*

*இடர் வீதத்தைக் கணக்கிடுதல்........ 14*

**படி மூன்று: கட்டுப்பாடுகளைச் செயல்படுத்துதல்........ 17**

*தடுக்கும் மற்றும் தணிக்கும் கட்டுப்பாடுகள்........ 18*

*அபாயம் மற்றும் இடர் பதிவேடு........ 18*

**படி நான்கு: கட்டுப்பாடுகளைச் சரிபார்த்தல் ........ 19**

*கட்டுப்பாடுகளைச் சரிபார்த்தல் ........ 19*

*திறன்மிகு கட்டுப்பாடுகளைப் பராமரித்தல்........ 19*

**இணைப்பு: மாதிரி அபாயம் மற்றும் இடர் ஆகியவற்றிற்கான பதிவேடு........ 20**

## அறிமுகம்

அனைத்துப் பணி நடவடிக்கைகளிலும் இடர் உள்ளது. அதைப் புரிந்துகொள்வதும், நிர்வகிப்பதும் மிக முக்கியம். ஒழுங்கமைக்கப்பட்ட வழியில் இடரை மதிப்பிடுவதும், கட்டுப்படுத்துவதும் உங்கள் வணிகத்திற்கு உதவுகிறது:

- மக்களையும் சுற்றுச்சூழலையும் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருங்கள்
- உங்கள் சட்டப்பூர்வமான கடமைகளைப் பூர்த்தி செய்யுங்கள்
- சமூகம் என்ன எதிர்பார்க்கிறதோ அதைக் கொடுங்கள்.

மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் தீங்கு விளைவிப்பது என்பது பரந்த அளவிலான காரியங்களைப் பாதிக்கும். ஆரம்பிக்கும் பொழுதே தடுப்பதால், முதலில் உங்கள் வணிகத்தை சட்ட நடவடிக்கை மற்றும் சுத்தம் செய்வதற்கான அறிவிப்புகள் போன்ற செலவுகளிலிருந்து காப்பாற்ற முடியும்.

## எதற்காக இந்த வழிகாட்டி

இந்த வழிகாட்டி உங்களுக்கு இடர் மேலாண்மை கட்டமைப்பை வழங்குகிறது. இது மக்களின் ஆரோக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் தீங்கு விளைவதைத் தடுக்க உதவும். உங்கள் வணிகம் எந்த அளவு இருந்தாலும், வெவ்வேறு நிலை இடர்களுக்கு இந்த வழிகாட்டியில் உள்ள யோசனைகளை நீங்கள் பயன்படுத்தலாம். இருப்பினும், பெரிய வணிக மையங்கள் அல்லது சுற்றுச்சூழலுக்கும் பொது சுகாதாரத்துக்கும் அதிக ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவற்றில் மிகவும் சிக்கலான முறைகளைப் பயன்படுத்த வேண்டியதிருக்கலாம்.

தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு (OHS) இடர்களை நிர்வகிக்கப் பல பணியிடங்கள் பயன்படுத்துகின்ற அதே முறையைத்தான் இந்த வழிகாட்டியிலும் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. இந்த வழிகாட்டி மாசு மற்றும் கழிவுகளின் அபாயங்களை மட்டுமே உள்ளடக்கியதாய் இருக்கிறது. மேலும் இதை, உங்கள் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு (OHS) நிர்ணயங்களுக்கு இணங்கப் பயன்படுத்தக்கூடாது. உங்கள் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு (OHS) நிர்ணயங்களை நிர்வகிப்பது பற்றிய தகவலுக்கு, தயவுசெய்து ஒர்க்சேஃப் விக்டோரியாவைத் தொடர்பு கொள்ளவும்.

## இந்த வழிகாட்டியைப் பற்றி

இந்த ஆவணத்தில் உள்ள தகவல்களை நீங்கள் பொதுவான வழிகாட்டியாக மட்டுமே பயன்படுத்த வேண்டும். இது சட்ட அல்லது தொழில்முறை ஆலோசனையாகக் கருதப்படாது. இதை நீங்கள் சட்டத்தின் அறிக்கையாகப் பயன்படுத்தக்கூடாது. இது ஒரு பொதுவான வழிகாட்டியாக மட்டுமே கருதப்படுகிறது. எனவே இதில் பொதுமைப்படுத்தல்கள் இருக்கலாம். உங்களின் குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு நீங்கள் தொழில்முறை ஆலோசனையைப் பெற வேண்டும்.

தகவலானது, நிகழ் காலத்திற்கானது மற்றும் துல்லியமானது என்பதை உறுதிப்படுத்த முயற்சித்தோம். ஆனால் தகவல் துல்லியமானது, நிகழ் காலத்திற்கானது அல்லது முழுமையானது என்பதற்கு எங்களால் உத்தரவாதம் அளிக்க முடியாது.

| *இடர் என்றால் என்ன?* |
| --- |
| நீங்கள் புரிந்து கொள்ள வேண்டிய சில முக்கிய சொற்கள் உள்ளன. அவற்றைப் புரிந்து கொண்டால்தான் இந்த வழிகாட்டி அர்த்தமுள்ளதாக இருக்கும்.<br><br>**அபாயம்** என்பது ஒரு **இடர்,** அது **ஏற்படுபவருக்குக்** கொடுக்கும் பயமுறுத்தல் ஆகும்..<br><br>• **அபாயம்** என்பது தீங்கு விளைவிக்கும் ஒன்று (புகை அல்லது புயல் நீரில் கொட்டுவது போன்றவை).<br>• **ஏற்பி** என்பது தீங்கை ஏற்கும் மதிப்புமிக்க ஒன்று (சுற்றுச்சூழல் அல்லது மக்களின் ஆரோக்கியம் போன்றவை).<br>• **பாதை என்பது ஏற்பவரை அடையக்கூடிய வழியாகும் (காற்று, நீர் அல்லது மண் போன்றவை).** |
| இரண்டு காரணிகள் அபாயத்தை உருவாக்குகின்றன: **சாத்தியக்கூறு** மற்றும் **விளைவு.**<br><br>• **சாத்தியக்கூறு** என்பது **அபாயமா**னது தீங்கு விளைவிக்கும் சாத்தியம் அல்லது வாய்ப்பு.<br>• **விளைவு** என்பது **அபாயம்** விளைவிக்கும் தீங்கின் அளவு அல்லது தாக்கத்தின் நிலை. |
| இடரை நிர்வகிக்க நீங்கள் **கட்டுப்பாடுகளை** வைக்கலாம். கட்டுப்பாடுகள் பின்வருமாறு:<br><br>• அபாயத்தை **நீக்குதல்** அல்லது அகற்றுவது<br>• அபாயத்துக்கு மாற்றாக வேறு ஏதாவது குறைந்த இடருக்கு **மாற்றுதல்**<br>• மாசுபடுவதைத் தடுக்கும் அல்லது பரவுவதைத் தடுக்கும் **பொறியியல் கட்டுப்பாடுகள் -** தானியங்கி மூடல் இயந்திரங்கள் அல்லது பண்டிங் போன்றவை (பண்டிங் என்பது எந்தவொரு கசிவையும் தக்கவைப்பதற்காக சேமிப்பகத்தைச் சுற்றிக் கட்டப்பட்ட சுவர் ஆகும்)<br>• வேலை செயல்முறைகள் அல்லது கண்காணிப்பு அமைப்புகள் போன்ற **நிர்வாகக் கட்டுப்பாடுகள்.** |

## இடர்களையும் அபாயங்களையும் கட்டுப்படுத்தும் படிகள்

இடரை மதிப்பிடுவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் நான்கு படிகள் உள்ளன (அட்டவணை 1 ஐப் பார்க்கவும்). இந்த முறை ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். இது நீங்கள் ஒரு கட்டுப்பாட்டை வைத்த பிறகு, திரும்ப படி 1 க்கு செல்கிறது.

*படம் 1: அபாயங்கள் மற்றும் இடர்களைக் கட்டுப்படுத்தும் படிகள்*




| *படி* | *நடவடிக்கை* | *விளக்கம்* |
|---|---|---|
| 1 | **அபாயங்களை அடையாளம் காணுதல்** | எந்த அபாயங்கள் தீங்கு விளைவிக்கக்கூடியவை? |
| 2 | **இடர்களை மதிப்பிடுதல்** | சாத்தியக்கூறு மற்றும் விளைவுகளின் அடிப்படையில் இடரின் நிலை என்ன? |
| 3 | **கட்டுப்பாடுகளைச் செயல்படுத்துதல்** | இடரை அகற்ற அல்லது குறைக்க வணிகம் என்ன செய்யலாம்? |
| 4 | **கட்டுப்பாடுகளைச் சரிபார்த்தல்** | வணிகம் பயன்படுத்தும் கட்டுப்பாடுகள் செயல்படுகின்றன என்பதை உறுதிப்படுத்த அவற்றை மதிப்பாய்வு செய்யவும். |

***அட்டவணை 1: இடர்களையும் அபாயங்களையும் கட்டுப்படுத்துவதற்கான படிகள்***

## படி ஒன்று: அபாயங்களை அடையாளம் காணுதல்




### எதை எதிர் நோக்குவது

வணிக மற்றும் தொழில்துறை நடவடிக்கைகளினால் வரும் அபாயங்கள் மக்களுக்கு அல்லது சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் எதையும் உள்ளடக்கி இருக்கின்றன. கீழேயுள்ள அட்டவணை பொதுவான சில அபாயங்களைப் பட்டியலிடுகிறது.

**அட்டவணை 2: பொதுவான பணியிடச் சுற்றுச்சூழல் மற்றும் மனித சுகாதார அபாயங்கள்**

| அபாயம் | விளக்கம் | பொதுவான ஆதாரங்கள் அல்லது காரணங்கள்: |
|---|---|---|
| **வேதியியல் கசிவுகள்** | வேதியியல் கசிவுகள் மண், நிலத்தடி நீர் மற்றும் அருகிலுள்ள நீர்வழிகளை மாசுபடுத்தி மக்களின் ஆரோக்கியத்தைப் பாதிக்கும். | - கொள்கலன்கள் கசிவு<br>- கசிவுகளை வெளியே விடாதிருக்க போதுமான அளவு பண்டிங் இல்லை<br>- மோசமான சேமிப்பு மற்றும் கையாளுகை |
| **புயல் நீர் மாசுபாடு** | புயல் நீர் வடிகால் ஒரு சுத்திகரிப்பு நிலையத்திற்குச் செல்லாது, ஆனால் அருகிலுள்ள சிற்றோடைகள், ஆறுகள், ஈரநிலங்கள் மற்றும் விரிகுடாக்களுக்கு நேரடியாகச் செல்கிறது. புயல் நீரில் எது சென்றாலும் அது சுற்றுச்சூழலுக்குச் சென்று பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். | - அழுக்கு மற்றும் அரிப்பு<br>- சுத்தம் செய்ய பயன்படுத்தப்படும் சலவைப் பொருட்கள் மற்றும் ரசாயனங்கள்<br>- குப்பை<br>- எண்ணெய் மற்றும் எண்ணெய் பசை<br>- சிகரெட் துண்டுகள்<br>- வெளியிடத்தில் ரசாயனங்களைப் பயன்படுத்துதல் |
| **தீ அல்லது வெடிப்பு** | தீ மற்றும் வெடிகள் ஓடுதல், நச்சு புகை மற்றும் தூசி பரவுதல் போன்ற ஆபத்துக்களோடு கூடவே உயிர்களுக்கும் சொத்துகளுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும். | - புகை பிடித்தல்<br>- தீப்பொறி<br>- சூடான மேற்பரப்புகள்<br>- மோசமான சேமிப்பு<br>- மின் அபாயங்கள்<br>- தூசி<br>- வேண்டுமென்றே தீ வைத்தல் |
| **தூசி** | தூசி கடுமையான உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும். குறிப்பாக மக்களின் சுவாசம், இதயம் மற்றும் இரத்த ஓட்டம் போன்றவற்றைப் பாதிக்கும். இது கண்கள், தொண்டை மற்றும் சருமத்திற்கும் எரிச்சலைக் கொடுக்கும். | - மரவேலை<br>- இயற்கைக் காட்சி<br>- சிமென்ட் வேலைகள்<br>- மூடப்படாத அழுக்குகளின் குவியல்கள்<br>- அரைக்கும்<br>- வெல்டிங்<br>- உலோகப் பொருட்களை வெட்டுதல் அல்லது துண்டாக்குதல்<br>- பராமரிக்கப்படாத சாலைகள் |

| | | | |
|---|---|---|---|
| **துர்நாற்றம் அல்லது வாசனை** | நாற்ற மாசுபாடு மக்களின் ஆரோக்கியத்தைப் பாதிக்கும். இதனால் குமட்டல் மற்றும் தலைவலி ஏற்படும். சில வாசனைகள் மிகவும் கடுமையான உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடிய நச்சு வாயுக்கள் இருப்பதையும் காட்டக்கூடும். | - கழிவுகள்<br>- இரசாயன பயன்பாடு<br>- கழிவுநீர்<br>- விலங்குகள் | - கம்போஸ்டிங்<br>- வெளியேற்றி மற்றும் வென்டிலேட்டர்கள்<br>- உணவு பதப்படுத்துதல் |
| **காற்று மாசுபாடு** | பதப்படுத்துதல் அல்லது உற்பத்தி நிலையில் இருந்து காற்றில் கலக்கும் நச்சு அல்லது அபாயகரமான பொருட்கள் மிகுந்த மாசுபாட்டை ஏற்படுத்துகின்றன. | - உலைகள்<br>- கொதிகலன்கள்<br>- செயல்முறை துவாரங்கள் | - மொத்த சேமிப்பு தொட்டிகள்<br>- உபகரணங்களின் கசிவுகள்<br>- மூடப்படாத கரைப்பான்கள் |
| **கழிவுநீர்** | வர்த்தகக் கழிவுகள் மற்றும் வணிக நிறுவனங்களிலிருந்து வெளியேறும் பிற கழிவு நீர் தீங்கு விளைவிக்கும் மாசுபாட்டைக் கொண்டு செல்லும். | - செயலாக்கம்<br>- தயாரிப்பு<br>- உற்பத்தி | |
| **இரைச்சல்** | அதிக சத்தம் சமுதாயத்தைத் தொந்தரவு செய்து உயர் இரத்த அழுத்தம், இதய நோய், எரிச்சல், மன அழுத்தம் மற்றும் தூக்கத்திற்கு இடையூறு ஆகியவற்றைவிளைவிக்கும். | - இயந்திரங்கள்<br>- விலங்குகள் | - அதிர்வுகளை<br>- வாகனங்கள் மற்றும் பீப்பர்கள் |
| **அபாயகரமான கழிவுகள்** | மோசமாக நிர்வகிக்கப்படும் கழிவுகள் மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் தீங்கு விளைவிக்கும். | - முறையாக நிர்வகிக்கப்படாத, கொண்டு செல்லப்படாத அல்லது அகற்றப்படாத அபாயகரமான தொழில்துறை கழிவுகள்<br>- அஸ்பெஸ்டாஸ் கலந்த தூசி மற்றும் மண் | |
| **நோய் கிருமிகள்** | நோய்க்கிருமிகளில் பாக்டீரியா, வைரஸ்கள் அல்லது பிற நுண்ணுயிரிகள் உள்ளன. அவை நோயை ஏற்படுத்தும். | - கை கழுவும் முனையங்கள் போதுமான அளவு இல்லை<br>- கழிவுகளை சுகாதாரமான முறையில் கையாளாமல் இருப்பது<br>- நிரம்பி வழியும் செப்டிக் தொட்டிகள் | - கழிவுநீர்<br>- அசுத்தமான உணவு<br>- அங்ககக் கழிவுகள்<br>- விலங்குகளின் கழிவுகள் மற்றும் சடலங்கள் |




## அபாயங்களை அடையாளம் காணும் வழிகள்

மக்களின் உடல்நலத்திற்கு மற்றும் மாசு அல்லது கழிவுகளில் இருந்து சுற்றுச் சூழலுக்கு அபாயமானவற்றை அடையாளம் காண பல வழிகள் உள்ளன. உங்கள் எல்லா அபாயங்களையும் நீங்கள் கண்டறிந்ததும், அவற்றை பதிவு செய்து ஆவணப்படுத்த வேண்டும். இந்த வழிகாட்டியின் முடிவில் இருக்கும் அபாயம் மற்றும் இடர் பதிவேட்டைப் பயன்படுத்தலாம்.

### *வணிக நடவடிக்கைகளை அடையாளம் காணுதல்*

உங்கள் வணிகத்தின் செயல்பாடுகள் மற்றும் மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இவை எவ்வாறு அபாயத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதைப் பார்ப்பது முக்கியம். எடுத்துக்காட்டாக, வெவ்வேறு பொருட்களை சேமித்துக் கையாளுதல், சலவைப் பொருட்களை உபயோகித்தல், நில அமைவு மற்றும் அரைத்தல் ஆகியவை அபாயங்களை ஏற்படுத்தும் பொதுவான செயல்பாடுகள்.

### *பணி செய்யும் இடத்தை ஆய்வு செய்தல்*

உங்கள் பணியிடத்தை சுற்றி நடப்பது பல அபாயங்களை அடையாளம் காண்பதற்கான நேரடி வழியாகும்.

இருப்பினும், ஆலை, உபகரணங்கள் அல்லது கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் போன்ற விஷயங்களை மட்டும் நீங்கள் ஆய்வு செய்யக்கூடாது. உங்கள் பணி அமைப்புகள் மற்றும் நடைமுறைகளையும் நீங்கள் பார்க்க வேண்டும். உங்கள் ஆய்வுகளைச் செய்யும்போது உங்களுடன் உங்கள் வணிகத்தைப் பற்றி அறிமுகமில்லாத ஒருவர் இருப்பது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். தினமும் தொடர்ந்து பணிகளைச் செய்கிறவர்கள் பொதுவான அபாயங்களை எளிதில் கவனிக்க முடியாது.

**பாதைகள்** மற்றும் **ஏற்பிகளைப்** பற்றி சிந்தியுங்கள் (பக்கம் 1 இல் உள்ள ‘ஆபத்து என்றால் என்ன’ என்கிற வரையறைகளைப் பார்க்கவும்). வீடுகள், நீர்வழிகள் அல்லது பூங்காக்கள் போன்ற தீங்கு கிரகிக்கும் ஏற்பிகள் அருகிலேயே உள்ளதா என்று சிந்தியுங்கள். மாசுபட வாய்ப்புள்ள ஒரு சிற்றோடை, காற்று மற்றும் தள வடிகால் போன்ற பாதைகளைப் பற்றியும் சிந்தியுங்கள்.

### *கலந்தாய்வுகள் மற்றும் கூட்டங்கள்*

ஊழியர்கள் மற்றும் பங்குதாரர்களுடன் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்வது அபாயங்களை அடையாளம் காண்பதற்கான ஒரு சிறந்த வழியாகும். இந்தச் சந்திப்பின் போது, வேலை

செயல்முறைகள் மற்றும் தளத்தில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் பொருட்கள் போன்ற அபாயங்களை ஏற்படுத்தக்கூடிய விஷயங்களைப் பற்றி மக்கள் பேசலாம்.

இந்தச் சந்திப்பு உங்கள் பணியிட கலாச்சாரத்தின் இடர் உண்டாக்கும் பகுதியைப் பற்றிய யோசனையை உருவாக்க முடியும். தீயணைப்பு அதிகாரிகள் அல்லது உள்ளூராட்சி மன்றம் போன்ற உங்கள் பணியிடத்திற்கு வெளியே உள்ளவர்களைச் சேர்க்கவும் இது உங்களுக்கு வாய்ப்பளிக்கும்.

## கிடைக்கும் தகவல்களைப் பயன்படுத்துதல்

அபாயங்களை அடையாளம் காண உதவும் தகவல்கள் பல இடங்களிலிருந்து வரலாம், அவையாவன:

- உங்கள் தொழிலில் ஏற்படக்கூடிய புதிய அபாயங்கள் மற்றும் இடர்கள் பற்றிய தகவல்களை உங்களுக்கு வழங்கக்கூடிய தொழிற் சங்கங்கள்
- உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் ஆலை, பொருட்கள், அல்லது செயல்முறைகளில் உள்ள அபாயங்கள் பற்றிய தகவல்களை உங்களுக்கு வழங்க முடியும்
- பொருள் பாதுகாப்பு தரவுத் தாள்கள் (MSDS) என அழைக்கப்படும் பாதுகாப்பு தரவுத் தாள்கள் (SDS), பெரும்பாலும் ஒரு தயாரிப்புடன் தொடர்புடைய சுற்றுச்சூழல் அபாயங்கள் மற்றும் இடர்களை நீங்கள் கட்டுப்படுத்தக்கூடிய வழிகள் பற்றிய பயனுள்ள தகவல்களைக் கொண்டுள்ளன.
- காப்பீட்டு வழங்குநர்கள் பெரும்பாலும் அபாயங்கள் மற்றும் இடர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய வழிகள் பற்றிய பயனுள்ள தகவல்களை உங்களுக்கு வழங்கலாம்
- தொழில்நுட்ப, தீயணைப்பு மற்றும் சுகாதார பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிபுணர்கள்
- தளத்திற்கான வர்த்தகக் கழிவு ஏற்பாடுகள்

## படி 2: இடர்களை மதிப்பிடுதல்




படி 1 இல் நீங்கள் அடையாளம் கண்ட அபாயங்களை சரி செய்வதற்கு நீங்கள் இப்போது மதிப்பீடு செய்ய வேண்டும்:

- அவை எவ்வாறு தீங்கு விளைவிக்கும்
- அந்த தீங்கு எவ்வளவு தீவிரமானது
- அது நடப்பதற்கு எவ்வளவு சாத்தியம் உள்ளது.

இடர் மதிப்பீடு என்பது இடர்கள் மற்றும் அவற்றின் அபாயங்கள் குறித்த உங்கள் அறிவையும் புரிதலையும் அதிகரிப்பதற்கான ஒரு வழியாகும். இதன் மூலம் அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதை நீங்கள் தீர்மானிக்க முடியும்.

**இதைச் செய்ய, இந்த வழிமுறைகளைப் பின்பற்றவும்:**

1. ஆபத்து எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அலசி ஆராயுங்கள்.
2. ஒவ்வொரு தாக்கத்தின் விளைவுகளையும் அல்லது தீவிரத்தையும் அலசி ஆராயுங்கள்.
3. ஒவ்வொரு அபாயத்துக்கும் அபாய வீதத்தைக் கணக்கிடுங்கள்.

### 1. சாத்தியக்கூறுகளை மதிப்பிடுதல்

முதல் படி, அபாயம் விளைவிக்கும் தீங்குக்கான சாத்தியம் எவ்வளவு என்பதை**க்** கணக்கிட வேண்டும். சாத்தியம் என்பது உங்களுக்குத் தெரிந்தவற்றை அல்லது நீங்கள் தெரிந்திருக்க வேண்டியவற்றை அடிப்படையாகக் கொண்டது. மேலும் சூழ்நிலைகளும் மற்றும் செயல்பாடுகளும் அபாயங்க**ள்** மீது எவ்வாறு தாக்கத்தை உண்டு பண்**ணு**கின்றன என்பது பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும்.

சாத்தியக்கூறுகளை இவ்வாறு மதிப்பிடலாம்:

- **சில:** சாதாரண சூழ்நிலைகளில் தவறாமல் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுவது.
- **மிகவும் சாத்தியம்:** சில நேரத்தில் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுவது.
- **சாத்தியம்:** சில நேரத்தில் நிகழலாம்.
- **சாத்தியமில்லை:** சாதாரண சூழ்நிலைகளில் நடக்க வாய்ப்பில்லை.
- **அரிது:** நடக்கலாம் ஆனால் பெரும்பாலும் ஒருபோதும் நடக்காது.

அட்டவணை 3 சாத்தியங்களை அலச உங்களுக்கு உதவ முக்கிய வழிகளை**ப்** பட்டியலிடுகிறது.

**அட்டவணை *3.* சாத்தியக்கூறுகளை அறிவதற்கான முக்கிய வழிகள்**

| *முக்கிய வழிகள்* | *விளக்கம்* |
|---|---|
| **முன்பு என்ன நடந்தது** | நிகழ்வுகள், விபத்துகள் மற்றும் நெருக்கத்தில் தவறவிட்டவை போன்ற இதற்கு முன்னர் என்ன நடந்தது என்பவற்றைப் பார்ப்பது உங்களுக்கு சாத்தியக்கூறு பற்றிய நல்ல யோசனையைத் தருகிறது. உங்கள் சொந்த வியாபாரத்தை மட்டும் பார்ப்பது முக்கியம் அல்ல. ஆனால் தொழிலின் சகல பகுதிகளிலும் முழுவதும் என்ன நடந்தது என்பதைப் பாருங்கள். |
| **ஏற்கனவே உள்ள கட்டுப்பாடுகள்** | நீங்கள் ஏற்கனவே வைத்திருக்கும் கட்டுப்பாடுகளையும் அவை எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதையும் பாருங்கள். |
| **அடிக்கடி என்றால் எவ்வளவு** | ஒரு அபாயம் என்பது எல்லா நேரத்திலுமோ அல்லது சில நேரங்களில் மட்டுமோ இருக்கலாம். அபாயம் அடிக்கடி இருந்தால், அது தீங்கு விளைவிக்கும் வாய்ப்பும் அதிகமாக இருக்கும். |
| **நிலைமைகளில் மாற்றங்கள்** | நிலைமைகள் காலப்போக்கில் மாறுகின்றன மற்றும் ஆண்டு முழுவதும் மாறுபடுகின்றன. இந்த மாற்றங்கள் தீங்கு விளைவிக்கும் அபாயத்திற்கான சாத்தியங்களைப் பாதிக்கும். |
| **நடத்தை** | மக்கள் செயல்படும் அல்லது நடந்து கொள்ளும் விதம் தீங்கு விளைவிக்கும் அபாயத்தை பாதிக்கும். உதாரணமாக, மக்கள் தவறு செய்கிறார்கள், உபகரணங்களை தவறான வழியில் பயன்படுத்துகிறார்கள் அல்லது சிந்திக்காமல் செயல்படுகிறார்கள். |

## 2. விளைவுகளை மதிப்பிடுதல்




இரண்டாவது படி என்னவென்றால், ஒவ்வொரு அபாயமும் ஏற்படுத்தக்கூடிய தீங்கு மற்றும் இந்த தீங்கு எவ்வளவு தீவிரமானதாக இருக்கும் என்பதைக் கணக்கிடுவதாகும். இதில் சிந்திக்க வேண்டிய அவசியம் உள்ளவை

- **முன் கட்டுப்பாட்டு ஆபத்து (உள்ளார்ந்த ஆபத்து)** - எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை என்றால் எவ்வளவு தீங்கு ஏற்படும்

  **பிந்தைய கட்டுப்பாட்டு ஆபத்து (மீதமுள்ள ஆபத்து)** - தற்போதுள்ள கட்டுப்பாடுகளுடன் எவ்வளவு தீங்கு ஏற்படும்தற்போதுள்ள கட்டுப்பாடுகள் எவ்வளவு சிறப்பாக செயல்படுகின்றன என்பதை அறிந்து கொள்வதற்கும், உங்களுக்கு புதிய அல்லது மேம்பட்ட கட்டுப்பாடுகள் தேவையா என்பதை அறிந்து செயல்படவும் இது உதவுகிறது.
- எவ்வாறு ஒரு அபாயகரமான செயல்பாடு *செய்யப்பட வேண்டும்* என்பதற்குப் பதிலாக ஒரு அபாயகரமான செயல்பாடு எவ்வாறு *செய்யப்பட்டிருக்கிறது*. எடுத்துக்காட்டாக, ஒரு நடைமுறையில் எழுதப்பட்டதற்கு மாறாக நீங்கள் என்ன செய்தீர்கள் என்பது.
- அபாயத்தின்போது வழக்கத்திற்குப் புறம்பான சூழ்நிலைகளில் அபாயத்துடனான செயல்பாடும், பொதுவாக எப்படி நடக்க வேண்டும் என்பதும். எடுத்துக்காட்டாக, தீவிர வானிலை, அபாயத்தை எவ்வாறு பாதிக்கும் மற்றும் சிறந்த கட்டுப்பாடுகள் அந்த இடங்களில் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும்?

இதில் ஏற்படக்கூடிய தாக்கத்தைப் பற்றியும் நீங்கள் சிந்திக்க வேண்டும்:

- **மக்கள் -** ஊழியர்கள், பார்வையாளர்கள், வாடிக்கையாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், அவசர சேவை பணியாளர்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய மற்ற எவரும்
- **சமூகம் -** அப்பகுதியில் உள்ளவர்கள் (அங்கு வசிக்கும் மக்கள் உட்பட), வணிகங்கள் மற்றும் பரந்த சமூகம்
- **சொத்து -** ஆன்-சைட் மற்றும் அண்டை சொத்து, அத்துடன் பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் முக்கிய சாலைகள் அடங்கிய பொது மற்றும் சமூக பகுதிகள்
- **சுற்றுச்சூழல் -** உள்ளூர் சிற்றோடைகள் மற்றும் நீர்வழிகள், காற்று மற்றும் மண்.

குறைந்தது முதல் உயர்ந்தது வரையிலான விளைவுகளை விவரிப்பது நீங்கள் உங்கள் இடர் விகிதத்தைக் கணக்கிட உதவும். விளைவுகளின் விளக்கங்களுக்கான எடுத்துக்காட்டுகளுக்கு, படம் 2: இடர் மேட்ரிக்ஸ் உதாரணத்தைப் பார்க்கவும்.

**அட்டவணை 4. விளைவுகளைச் செயல்படுத்தக் கேட்க வேண்டிய கேள்விகள்**

| கேள்விகள் | விளக்கம் |
|---|---|
| என்ன வகையான தீங்கு ஏற்படலாம்? | பல வகையான தீங்குகள் உள்ளன. ஒரு நிகழ்வு பல வகையான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும். எடுத்துக்காட்டாக, ஒரே நிகழ்வு சுற்றுச்சூழலுக்கும், மக்களின் ஆரோக்கியத்திற்கும் தீங்கு விளைவிக்கும். |
| தீங்கின் தீவிரத்தை எந்த விஷயங்கள் பாதிக்கும்? | இடரின் விளைவு வெவ்வேறு சூழ்நிலைகளில் மாறுபடும். எடுத்துக்காட்டாக, சூடான மற்றும் வறண்ட காலநிலையில் நெருப்பு மிகத் தீவிரமாகவும் கட்டுப்படுத்துவதற்குக் கடினமாகவும் இருக்கலாம். |
| எந்த வழிகளில் மக்களுக்கு அல்லது சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படலாம்? | ஈரநிலங்கள் மற்றும் நீர்வழிகள், மற்றும் சுற்றியுள்ள குடியிருப்புப பகுதிகள், மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் சாலைகள் போன்ற முக்கியமான சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து சிந்திக்க வேண்டியது அவசியம். |

## 4. இடர் வீதத்தைக் கணக்கிடுதல்

இடரின் விளைவுகள் மற்றும் சாத்தியக்கூறுகள் பற்றி நீங்கள் சிந்தித்த பிறகு, ஒட்டுமொத்த இடர் வீதத்தைச் செயல்படுத்த நீங்கள் இவற்றைப் பார்க்க வேண்டும்.

நீங்கள் பயன்படுத்தக்கூடிய இடர் மேட்ரிக்ஸின் உதாரணத்தை படம் 2 காட்டுகிறது. இடர் மேட்ரிக்ஸில், சாத்தியங்கள் மற்றும் விளைவுகளுக்கு மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன. அவற்றை மேட்ரிக்ஸில் ஒப்பிட்டு குறைந்த அளவிலிருந்து தீவிரமானது வரை இடர் வீதத்தைக் கணக்கிடலாம். *SA / SNZ HB 89: 2013* இடர் மேலாண்மையில் பட்டியலிடப்பட்டுள்ள பிற கருவிகளைப் பயன்படுத்தி இடரை அளவிடலாம். - ஸ்டாண்டர்டுஸ் ஆஸ்திரேலியாவிலிருந்து பெறக்கூடிய இடர் மதிப்பீட்டு நுட்பங்கள் குறித்த வழிகாட்டுதல்கள்.

இடர்களுக்கு ஒரு அளவீடு கொடுப்பதற்கான காரணம், இடரை எவ்வாறு நிர்வகிப்பது என்பது குறித்த முடிவுகளை எடுக்க உங்களுக்கு உதவுவதாகும்.

## படம் 2: இடர் மேட்ரிக்ஸ் உதாரணம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சுற்றுச்சூழலுக்கு நிரந்தர அல்லது நீண்டகாலக் கடுமையான தீங்கு அல்லது உயிருக்கு ஆபத்தானது அல்லது மக்களின் உடல்நலம் மற்றும் நல்வாழ்வுக்கு நீண்டகால தீங்கு. | விளைவு | கடுமையான அளவில் | நடுத்தரம் | அதிகம் | அதிகம் | தீவிரம் | தீவிரம் |
| சுற்றுச்சூழலுக்குக் கடுமையான தீங்கு அல்லது மக்களின் உடல்நலம் மற்றும் நல்வாழ்வுக்கு உயர் மட்ட தீங்கு. | | மிகப்பெரிய அளவில் | நடுத்தரம் | நடுத்தரம் | அதிகம் | அதிகம் | தீவிரம் |
| நீண்ட காலத்திற்கு மக்களின் உடல்நலம் மற்றும் நல்வாழ்வு அல்லது சுற்றுச்சூழலுக்கு நடுத்தர அளவிலான தீங்கு. | | நடுத்தரமான அளவில் | குறைவு | நடுத்தரம் | நடுத்தரம் | அதிகம் | அதிகம் |
| சுற்றுச்சூழல் மீது குறைந்த அளவு தாக்கம் அல்லது மக்களின் உடல்நலம் மற்றும் நல்வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான குறைந்த வாய்ப்பு. | | சிறிய அளவில் | குறைவு | குறைவு | நடுத்தரம் | நடுத்தரம் | அதிகம் |
| சுற்றுச்சூழலில் எந்தவிதமான தாக்கமும் இல்லை அல்லது குறைந்த அளவு தாக்கம் இருப்பது அல்லது மக்களின் உடல்நலம் மற்றும் நல்வாழ்வில் எந்தவொரு தாக்கமும் இல்லை. | | குறைவான அளவில் | குறைவு | குறைவு | குறைவு | நடுத்தரம் | நடுத்தரம் |
| | | | அரிய | வாய்ப்பில்லா | சாத்தியமான | வாய்ப்புள்ள | குறிப்பிட்ட |
| | | | **சாத்தியக்கூறு** | | | | |
| | | | நடக்கலாம் ஆனால் அநேகமாக ஒருபோதும் நடக்காது | சாதாரண சூழ்நிலைகளில் நடப்பதற்கு வாய்ப்பில்லை | சில நேரங்களில் நடக்கலாம் | சில நேரத்தில் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுவது | சாதாரண சூழ்நிலைகளில் தவறாமல் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுவது |

### இடர் விகிதங்களின் விளக்கம்

| இடர் அளவு | விளக்கம் |
|---|---|
| தீவிரம் | முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத இடர்.<br>வேலையை நிறுத்திவிட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கவும். |
| அதிகம் | ஏற்றுக்கொள்ள முடியாத அளவு இடர். இடரை குறைக்கக் கட்டுப்பாடுகளை வைக்கவும். |
| நடுத்தரம் | கட்டுப்பாடுகள் இருந்தால் ஏற்றுக்கொள்ள முடியும்.<br>ஆபத்தைக் குறைந்த அளவிற்குக் குறைக்க முயற்சிக்கவும். |
| குறைவு | ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவு இடர். விடுபட முயற்சி செய்யுங்கள் ஆனால் அதிக அளவு இடர் நிலைகள் மிகவும் முக்கியம். |

*இந்தப் பக்கம் வேண்டுமென்றே வெறுமையாக விடப்பட்டது.*

## படி 3: கட்டுப்பாடுகளைச் செயல்படுத்துதல்




படம் 3 இல் காட்டப்பட்டுள்ளபடி, இடரை மிகவும் திறன் கொண்டதில் இருந்து குறைந்த செயல்திறன் வரை கட்டுப்படுத்த உங்கள் விருப்பங்களை வரிசைப்படுத்துங்கள். இந்த தரவரிசையில், கீழேயுள்ள மூன்று வகைகளில் ஒன்றில் நீங்கள் கட்டுப்பாடுகளை வைக்கிறீர்கள்.

**நீக்குதல்:** அபாயம் மற்றும் எந்தவொரு இடரையும் முற்றிலுமாக அகற்றுவதே மிகவும் பயனுள்ள கட்டுப்பாடு.

**அபாயம் அல்லது பொறியியல் கட்டுப்பாடுகளுக்கு மாற்றுதல்:** இரண்டாவது மிகவும் பயனுள்ள கட்டுப்பாடுகள், அபாயத்திற்கான காரணத்தை பாதுகாப்பான ஒன்றினால் மாற்றுகின்றன அல்லது பொறியியல் கட்டுப்பாடுகளுடன் அபாயத்தைக் கட்டுப்படுத்துகின்றன. வேலை செய்ய, இந்தக் கட்டுப்பாடுகள் மக்களின் செயல்பாடுகளிலிருந்து சுயாதீனமாக இருக்க வேண்டும்.

- அபாயத்துக்கான காரணத்தை ஒரு பாதுகாப்பான தெரிவுடன் **மாற்றுவது,** கட்டுப்பாடுகளை வைப்பதை விட மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.
- **பொறியியல் கட்டுப்பாடுகள்** ஒரு அபாயத்துக்கான இயற்பியல் சார்ந்த கட்டுப்பாடுகள். எடுத்துக்காட்டுகளுள் பண்டிங் மற்றும் இயந்திரங்களுக்கான தானியங்கி பணிநிறுத்த அமைப்புகள் அடங்கும்.

**நிர்வாகக் கட்டுப்பாடுகள் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களைப் பயன்படுத்துதல் (PPE):** குறைவான பயனுள்ள கட்டுப்பாடுகள், மனிதர்கள் சரியான செயலைச் செய்வதையோ அல்லது எல்லா நேரங்களிலும் கவனித்துக்கொள்வதையோ நம்பியுள்ளன.

- **நிர்வாகக் கட்டுப்பாடுகளில்** பயிற்சி, நடைமுறை, கொள்கை, மேற்பார்வை அல்லது ஷிப்ட் வடிவமைப்புகள் ஆகியவை அடங்கும். அவை அபாயத்தின் அச்சுறுத்தலைக் குறைக்கின்றன அல்லது குறைந்தபட்சம் அபாயம் பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றன. தூண்டல் செயல்முறைகள், அனுமதிக்கும் அமைப்புகள் மற்றும் பயிற்சி ஆகியவை எடுத்துக்காட்டுகளில் அடங்கும்.
- தீங்கு விளைவிக்கும் மாசுபாடு அல்லது கழிவுகளுக்கு மக்கள் வெளிப்படுத்தப்பட்டால், PPE பயன்படுத்தப்பட வேண்டும்.

அனைத்தும் இணைந்து, இந்த கூறுகள் இடர் கட்டுப்பாட்டு தரங்களின் வரிசைமுறையை உருவாக்குகின்றன.

படம் 3: **அபாயங்கள் மற்றும் இடர்களைக் கட்டுப்படுத்தும் வரிசைமுறை**




சில நேரங்களில் அபாயம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அல்லது விளைவுகளைக் கணக்கிடுவது கடினம். நீங்கள் எளிதாக வைக்கக்கூடிய கட்டுப்பாடுகள் இருந்தால், அவற்றை எப்படியும் நீங்கள் பயன்படுத்த வேண்டும் - இது முன்னெச்சரிக்கைக் கொள்கை என்று அழைக்கப்படுகிறது.

## தடுக்கும் மற்றும் தணிக்கும் கட்டுப்பாடுகள்

நீங்கள் கட்டுப்பாடுகளை, தடுக்கும் மற்றும் தணிக்கும் என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

- ***தடுக்கும்* கட்டுப்பாடுகள்** தீங்கு விளைவிக்கும் நிகழ்வுகள் நடப்பதை முதலாவதாகத் தடுக்கின்றன.
- **தணிக்கும் கட்டுப்பாடுகள்** தீங்கு விளைவிக்கும் நிகழ்வின் விளைவு அல்லது சேதத்தை குறைக்கிறது.

தடுப்புக் கட்டுப்பாடுகள் அபாயத்தை முழுவதுமாக அகற்றும், அதே நேரத்தில் தணிக்கும் கட்டுப்பாடுகள் உங்களால் அகற்ற முடியாத எந்தவொரு அபாயத்தின் தீங்கு விளைவிக்கும் தாக்கங்களையும் குறைக்க முயற்சிக்கின்றன.

**அட்டவணை 5. தடுக்கும் மற்றும் தணிக்கும் கட்டுப்பாடுகளின் எடுத்துக்காட்டுகள்**

| தடுக்கும் கட்டுப்பாடுகள் | தணிக்கும் கட்டுப்பாடுகள் |
|---|---|
| கழிவுகள் உள்ளிட்ட ஆபத்தான திரவங்கள் மற்றும் வாயுவைப் பாதுகாப்பாகச் சேமித்தல் | கசிவு இருந்தால் விரைவாகப் பயன்படுத்தக்கூடிய கசிவு கிட் |
| வேலை அமைப்புகளுக்கு அனுமதி | தீயணைப்பான்கள் |
| பாதுகாப்பு அமைப்புகள் | அவசரநிலை மேலாண்மை திட்டங்கள் |
| சாதனங்களின் வழக்கமான சோதனை மற்றும் பராமரிப்பு | பண்டிங் |
| கசிவு கண்டறிதல் மற்றும் பழுதுபார்க்கும் திட்டங்கள் | விரிவடையும் அடுக்குகள் என்று அழைக்கப்படும் வாயு எரிப்பு |

## அபாயம் மற்றும் இடர் பதிவேடு

அடையாளம் காணப்பட்ட அனைத்து அபாயங்களையும் அவற்றின் இடர்களையும் ஒரு பதிவேட்டில் பதிவு செய்யலாம். இதன் பொருள் முக்கிய நபர்கள் வணிகங்களின் முக்கிய அபாயங்களைப் புரிந்து கொள்ளலாம் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறைகளின் ஒரு பகுதியாக இடரைப் பற்றி சிந்திக்க முடியும்.

ஒவ்வொரு அபாயத்துக்கும் இடருக்கும் ஏற்கனவே உள்ள கட்டுப்பாடுகளை பதிவேட்டில் சேர்க்கலாம். எந்தவொரு நடைமுறை இடரையும் குறைக்கப் புதிய கட்டுப்பாடுகள் எப்போது சேர்க்கப்படலாம் என்பதை அடையாளம் காண உதவவும் இதைப் பயன்படுத்தலாம்.

நீங்கள் பதிவேட்டை தவறாமல் மதிப்பாய்வு செய்தால், அபாயங்களை திறம்பட கட்டுப்படுத்துவதில் உங்கள் வணிகம் தொடர்ந்து கவனம் செலுத்த முடியும். அத்துடன் அபாயங்களை நிர்வகிப்பதை தொடர்ந்து மேம்படுத்தவும் செய்கிறது.

இந்த வழிகாட்டியின் முடிவில் அபாயம் மற்றும் இடர் பதிவேட்டின் மாதிரியை நாங்கள் சேர்த்துள்ளோம்.

## படி 4: கட்டுப்பாடுகளைச் சரிபார்த்தல்




இடர்களை நிறுத்த அல்லது குறைக்க நீங்கள் வைத்திருக்கும் கட்டுப்பாடுகள், அவை எப்படி செயல்பட வேண்டுமோ அப்படி செயல்படுகின்றனவா என்பதை உறுதி செய்ய கண்காணிக்கப்பட வேண்டும்.

### கட்டுப்பாடுகளைச் சரிபார்த்தல்

கட்டுப்பாடுகளைச் சரிபார்த்தல் என்பது, படி 1 இல் அபாயங்களை அடையாளம் காண நீங்கள் பயன்படுத்திய அதே முறைகளைப் பயன்படுத்துவதுதான்.

உங்கள் கட்டுப்பாடுகள் எவ்வளவு பயனுள்ளவை என்பதைச் சரிபார்க்க நீங்கள் பயன்படுத்தக்கூடிய பொதுவான முறைகள்:

- வழக்கமான கள ஆய்வுகள் மற்றும் தணிக்கைகள்
- ஊழியர்கள், ஒப்பந்தக்காரர்கள், குடியிருப்பாளர்கள் மற்றும் நில உரிமையாளர்களுடன் பேசுவது
- இடர் கட்டுப்பாட்டு அமைப்புகளை ஆய்வு செய்தல், சோதனை செய்தல் மற்றும் பராமரித்தல்
- உற்பத்தியாளர் மற்றும் சப்ளையர் ஆகியோரின் அறிவுறுத்தல்கள் போன்ற தகவல்களைப் பயன்படுத்துதல்
- சம்பவம் மற்றும் நெருக்கத்தில் தவறவிட்டவை ஆகியவற்றின் அறிக்கைகள் போன்ற பதிவுகள் மற்றும் தரவை பகுப்பாய்வு செய்தல்.

இந்தச் சோதனைகளை நீங்கள் தவறாமல் செய்தால், செயல்படாத கட்டுப்பாடுகளையும், அவற்றை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் நீங்கள் அடையாளம் காணலாம்.

### திறன்மிகு கட்டுப்பாடுகளைப் பராமரித்தல்

கட்டுப்பாடுகளைப் பராமரிக்க மற்றும் அவை திறம்படச் செயல்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்த, நீங்கள் செய்ய வேண்டியவைகள்:

- அபாயங்கள் மற்றும் இடர் மதிப்பீடுகளை தவறாமல் மதிப்பாய்வு செய்யுங்கள். ஏனெனில் இவை காலப்போக்கில் மாறக்கூடும்
- அனைத்துப் பொறியியல் கட்டுப்பாடுகளையும் தவறாமல் சோதித்து, பராமரித்து, மதிப்பாய்வு செய்யுங்கள்
- இடர்கள் மற்றும் அவற்றின் கட்டுப்பாடுகளுக்கு ஒருவரைப் பொறுப்பேற்கச் செய்யுங்கள்
- காப்பீட்டு வழங்குநர்கள் மற்றும் அவசர சேவை பிரதிநிதிகள் போன்ற ஊழியர்கள் மற்றும் பிற நபர்களுடன் தவறாமல் பேசுங்கள்
- ஆபத்துகள் மற்றும் இடர் கட்டுப்பாடுகள் குறித்து அவற்றால் பாதிக்கப்படக்கூடிய எவருக்கும் அதைக் குறித்துத் தெளிவாகத் தெரிவியுங்கள்
- நிர்வாகக் கட்டுப்பாடுகளுக்காக புதுப்பிப்பு பயிற்சி உட்பட ஊழியர்களுக்கு தவறாமல் பயிற்சி அளிக்கவும்.

## இணைப்பு: மாதிரி அபாயம் மற்றும் இடர் பதிவேடு

**குறிப்பு:** குறைந்த இடர் உள்ள வணிகங்களுக்கு இந்த அபாயப் பதிவேடு பொருத்தமானது. அதிக இடர் அல்லது பெரிய வணிகங்கள் மிகவும் சிக்கலான பதிவேட்டை கையாள வேண்டியிருக்கலாம்.

| புதுப்பித்தல் | | நாள்: | | பங்கேற்பாளர்கள்: | |
|---|---|---|---|---|---|

| எண் | அபாயம் | சாத்தியமான தீங்கு | இடர் மதிப்பீடு | | | செயலில் இருக்கும் கட்டுப்பாடுகள் | மேலும் என்ன கட்டுப்பாடுகள் தேவை? | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | விளைவு | சாத்தியம் | இடர் மதிப்பீடு | | | நடவடிக்கை எடுத்தவர் | உரிய தேதி | முடிவுற்ற நாள் |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

வெளியீடு 1695.1* ஆகஸ்ட் 2018
*இது மே 2018 இல் வெளியிடப்பட்ட 1695 க்குப் பதிலான மாற்றம்

EPA விக்டோரியாவால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது
நிலை 3, 200 விக்டோரியா தெரு, கார்ல்டன் VIC 3053
1300 372 842 (1300 EPA VIC)

இந்த வெளியீட்டை ஆன்லைனில் PDF வடிவத்தில் **epa.vic.gov.au** இல் காணலாம்

உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் உதவி தேவைப்பட்டால் அல்லது இந்த ஆவணத்தை மொழிபெயர்க்க விரும்பினால், தயவுசெய்து 131 450 ஐ அழைத்து உங்களுக்கு விருப்பமான மொழியை அறிவுறுத்துங்கள்.